O

SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Ordinary Level

# தமிழ்

**1157/3**

தாள் 3

# LISTENING COMPREHENSION

**TAMIL**
Paper 3

**SPECIMEN PAPER**

*With effect from 2024 examination*

**About 30 minutes**

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 உன்னிடம் கூறப்படும்வரை நீ இந்தப் பக்கத்தைத் திருப்பக்கூடாது.

2 உன்னிடம் வழங்கப்பட்டுள்ள தெரிவுவிடைக்குரிய விடைத்தாளில் (PMCAS) உன்னுடைய பெயர், பதிவு எண் ஆகியவை சரியாக அச்சிடப்பட்டுள்ளனவா என்பதை உறுதிசெய்துகொள்ளவும்.

3 இவ்வினாத்தாளில் 10 வினாக்கள் இடம்பெற்றுள்ளன.

4 ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றுதான் மிகப் பொருத்தமான விடை. அவ்விடையின் எழுத்துக்குரிய (A, B, C அல்லது D) நீள்வட்டத்தை உனது தெரிவுவிடைக்குரிய விடைத்தாளில் நிழலிடவும்.

இவ்வினாத்தாள் 3 அச்சிடப்பட்ட பக்கங்களையும் 1 அச்சிடப்படாத பக்கத்தையும் கொண்டுள்ளது.

Singapore Examinations and Assessment Board

©MOE

ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையின் எழுத்துக்குரிய (A, B, C அல்லது D) நீள்வட்டத்தை உன்னுடைய தெரிவுவிடைக்குரிய விடைத்தாளில் நிழலிடவும்.

பனுவல் 1

1 வாலண்டினா ஏன் பசுமைத் தூதராக நியமிக்கப்பட்டாள்?
(A) அவள் மரங்கள்மீது அளவற்ற அன்பு வைத்திருந்ததால்
(B) அவள் மரங்கள் வளர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டியதால்
(C) அவள் வளர்த்த மரங்கள் சாலைப் பணிகளுக்காக வெட்டப்பட்டதால்
(D) அவள் அனுபவித்த வேதனையைச் சமூக ஊடகங்கள் வெளியிட்டதால்

பனுவல் 2

2 சமூக அமைப்புகளின் முயற்சிகள் எப்போது முழுமையாக வெற்றி பெறும்?
(A) மக்கள் சமூகப் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளும்போது
(B) சமூக நிகழ்ச்சிகளில் உணவு வீணாக்கப்படுவதைத் தடுக்கும்போது
(C) உலகில் உள்ள அனைவருக்கும் போதுமான உணவு கிடைக்கும்போது
(D) மக்கள் உணவுப்பொருள்களைச் சேமிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்கும்போது

பனுவல் 3

3 மன்னர் படைத்தளபதியைப் பார்த்து ஏன் புன்னகை புரிந்தார்?
(A) படைத்தளபதி வீரர்களின் சோர்வினைப் போக்கியதால்
(B) படைத்தளபதி பகைவரை வென்ற மகிழ்ச்சியில் திளைத்ததால்
(C) படைத்தளபதியின் புத்திக்கூர்மையை மனத்திற்குள் மெச்சியதால்
(D) படைத்தளபதி வீரர்களுடன் பாதுகாப்பாக நாட்டிற்குத் திரும்பியதால்

பனுவல் 4

4 ஆர் கே நாராயணனின் சிறுகதைகள் எப்போது மக்களிடையே பிரபலமடைந்தன?
(A) அவரது சிறுகதைகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டபோது
(B) ஆங்கில இதழ்களில் அவரது சிறுகதைகள் வெளிவந்தபோது
(C) நண்பர்கள் பலரும் அவருடைய சிறுகதைகளைப் படித்தபோது
(D) அவரது சிறுகதைகள் கிரஹாம் கிரீனை மிகவும் கவர்ந்தபோது

5 ஆர் கே நாராயணன் பிற எழுத்தாளர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறார்?
(A) அவர் உலகப் புகழ்பெற்ற படைப்புகளைப் படைத்ததன்வழி
(B) அவர் ஒரு கிராமத்தின் கதையைத் தம் படைப்புகளில் கூறியதன்வழி
(C) அவர் தம் படைப்புகளைத் தொலைக்காட்சித் தொடர்களாக உருவாக்கியதன்வழி
(D) அவர் தம் படைப்புகளில் நடைமுறை வாழ்க்கையை எளிமையாக வெளிப்படுத்தியதன்வழி

பனுவல் 5

6 ‘உலகில் திறன்வாய்ந்தவர்’ என்ற விருதை லிடியன் நாதஸ்வரம் எப்போது பெற்றான்?
(A) இரு இசைக்கூறுகளை ஒரே நேரத்தில் வாசித்தபோது
(B) கண்களை மூடிக்கொண்டு பியானோ இசைக்கருவியை வாசித்தபோது
(C) பியானோ இசைக்கருவியில் வெவ்வேறு இசைக்கூறுகளை வாசித்தபோது
(D) இரு பியானோ இசைக்கருவிகளில் இரு வெவ்வேறு இசைக்கூறுகளை வாசித்தபோது

7 லிடியனின் வெற்றிக்கு அவனுடைய தந்தை முக்கியப் பங்காற்றினார் என்பதை எவ்வாறு அறியலாம்?
(A) அவனுக்குப் பல இசைக்கருவிகளை வாசிக்கக் கற்பித்ததன்வழி
(B) அவனது இசைத்திறமையை அறிந்து தொடர்ந்து வழிகாட்டியதன்வழி
(C) அவன் புதிதாக ஒன்றைச் சாதிக்க வேண்டும் என்று ஊக்கமூட்டியதன்வழி
(D) அவன் இந்தியாவின் இசைத்தூதர் என்னும் விருதைப் பெற உதவியதன்வழி

பனுவல் 6

8 ஆளில்லா வானூர்தியை எங்குப் பறக்கவிடலாம்?
(A) கடற்கரையைச் சுற்றியுள்ள இடங்களில்
(B) அரசாங்கம் அனுமதித்திருக்கும் இடங்களில்
(C) மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத இடங்களில்
(D) விமானப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத இடங்களில்

9 ஆளில்லா வானூர்தியைப் பயன்படுத்தி ஒரு நிகழ்ச்சியை ஒளிப்பதிவு செய்ய விரும்பும் ஒருவர் கட்டாயம் செய்ய வேண்டியது யாது?
(A) அரசாங்கத்தின் சட்டதிட்டங்களை அறிந்திருக்க வேண்டும்
(B) நிகழ்ச்சியை ஒளிப்பதிவு செய்யும் வழிகளை ஆராய வேண்டும்
(C) ஆளில்லா வானூர்தியை இயக்குவதற்குப் பயிற்சி பெற வேண்டும்
(D) ஆளில்லா வானூர்தியைக்கொண்டு ஒளிப்பதிவு செய்ய அனுமதி பெற வேண்டும்

10 மீட்புப் பணிகளுக்கு ஆளில்லா வானூர்தி எதற்குப் பயன்படுத்தப்பட்டது?
(A) இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதற்கு
(B) இடிபாடுகளில் சிக்கியவர்களோடு பேசுவதற்கு
(C) இடிபாடுகளில் சிக்கியவர்களைக் கண்டறிவதற்கு
(D) இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதற்கான பணிகளை விரைவுபடுத்துவதற்கு

முற்றும்

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.